## சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தில்

# ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி துணைத்தலைவர் ஆய்வு

சென்னை, ஆக.11-

தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் முதலீட்டு செயல்பாடுகளுக்கான துணைத்தலைவர் டாக்டர் டி.ஜே.பாண்டியன், கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் நேற்று ஆய்வு மேற்கொண்டார். ரெயில் திட்டம் மற்றும் அதன் வசதிகள் குறித்து அலுவலர்கள் எடுத்து கூறினார்கள்.

மேலாண்மை இயக்குனர் பிரதீப் யாதவ், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதிஉதவி உடன் கட்டமைக்கப் பட உள்ள 2-ம் கட்டத்தில் 4 மற்றும் 5-வது வழித்தடத்தின் எஞ்சிய உயர்மட்டத் தொகுப்பில் நடைபெற்று வரும் முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் ஆரம்ப கட்டப்பணிகள் குறித்து எடுத்து கூறினார்.

தொடர்ந்து அவர் கட்டுப்பாட்டு மையத்தை பார்வையிட்ட அவர், கோயம்பேட்டில் இருந்து எம்.ஜி.ஆர்.சென்டிரல் மெட்ரோ ரெயில் நிலையம் வரை ரெயிலில் பயணம் செய்தார். ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் உயர் முதலீட்டு செயல்பாட்டு நிபுணர் அமித்குமார், சென்னை மெட்ரோ ரெயில் நிறுனத்தின் இயக்குனர்கள் சுஜாதா ஜெயராஜ் (நிதி), ராஜேஷ் சதுர்வேதி, (அமைப்பு மற்றும் இயக்கம்), டி.அர்ச்சுனன் (திட்டங்கள்) மற்றும் உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.